**தலைப்பு 258 – கண்டி மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | கங்கவட்ட கோரளை | (ஏ) | ஹத்தரலியத்த | (கி) | யட்டிநுவர |
| (ஆ) | பாத்தஹேவாஹெட்ட | (ஐ) | பூஜாபிட்டிய | (கீ) | உடுநுவர |
| (இ) | தெல்தோட்டை | (ஒ) | தும்பனே | (கு) | ஹரிஸ்பத்துவ |
| (ஈ) | உடபலாத்த | (ஓ) | மினிப்பே | (கூ) | அகுரணை |
| (உ) | உடதும்பர | (ஔ) | குண்டசாலை | (கெ) | மெததும்பர |
| (ஊ) | பாத்ததும்பர | (க) | தொழுவ | (கே) | பஸ்பாகே கோரளை |
| (எ) | பன்வில | (கா) | கங்க இஹல கோரளை | | |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

கண்டி மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூன் 09 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை

பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 926.57 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 923.38 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்பு ரூபா 3.19 மில்லியன் அதாவது 0.3 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 823.47 | 820.38 | 3.09 | 0.38 |
| மூலதனம் | 103.10 | 103.00 | 0.10 | 0.10 |
| மொத்தம் | **926.57** | **923.38** | **3.19** | 0.34 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 30 அமைச்சுக்களிலிருந்தும் 21 திணைக்களங்களிலிருந்தும் முறையே ரூபா 5,075.61 மில்லியன் தொகையும் ரூபா 2,029.89 மில்லியன் தொகையுமாக ரூபா 7,105.50 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் முறையே ரூபா 4,702.00 மில்லியன் தொகையும் ரூபா 1,829.61 மில்லியன் தொகையுமாக ரூபா 6,531.61 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் முறையே ரூபா 373.61 மில்லியன் தொகையும் ரூபா 200.28 மில்லியன் தொகையுமாக ரூபா 573.89 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

கண்டி மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25801 | 70 | 69 | 51 | 58 | 240 | 202 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

கண்டி மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 0.52 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கு மீதி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 926 மில்லியன் கூட்டுத்தொகையாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கம்பஹா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. தலைப்பு 258 – கண்டி மாவட்டச் செயலகம்**

---

**3.1 பொது வைப்புக் கணக்கு**

---

மாவட்ட செயலகம் மற்றும் 18 பிரதேச செயலகங்களில் 2 வருடங்களை விஞ்சிய (காணி வைப்புக்கள் தவிர) ரூபா 7,828,665 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணைக்கக் கூற்று**

---

25801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணைக்கக்கூற்றின் படி, அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,977,969 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 06 மாதங்கள் முதல் 05 வருடங்கள் வரையிலான காலத்திலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு கண்டி மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

(ஆ) கண்டி மாவட்ட செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் மரணித்த மற்றும் ஓய்வு பெற்றுச்சென்ற 38 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 2,838,250 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 , 4.2.5 மற்றும் 4.4 முதல் 4.6 வரையுள்ள பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்தக் கடன் மீதிகள் 2012 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய கடன் மீதிகளாகும்.

(இ) இடமாற்றலாகிச் சென்ற 9 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 847,563 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் மற்றும் இடமாற்றலாகி வந்த 04 உத்தியோகத்தர்களுக்காகத் தீர்க்கப்பட வேண்டிய ரூபா 269,465 தொகையான கடன் மீதிகள் தொடர்பாக 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அந்தக் கடன் மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------

கங்கவட்டகோரளை பிரதேச செயலகத்தின் இருப்புப் பதிவேட்டின் படி, 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட புரெஜெக்டர் இயந்திரமொன்று (3m Overhead Projector 1700 Series) பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

---------------------------------------------

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புக்களின் மீதி ரூபா 45,430 தொகையாக காணப்பட்டது.

## 3.4 இணக்கமின்மைகள்

----------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் உடபலாத பிரதேச செயலகத்திற்கு 56 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். பிரதேச செயலகத்தினால் அந்த உத்தியோகத்தர்கள் 56 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வெளிக்கள உத்தியோகத்தர்களாக ஈடுபடுத்தப்பட்டு ரூபா 17,058,096 தொகையான வேதனம் செலுத்தப்பட்டிருந்தது. HAF/01/9 ஆம் இலக்க நானாவித மாவட்ட நிர்வாகப் பிரிவின் சுற்றறிக்கைக்கு முரணாக 2014 நவம்பர் மாதம் வரையில் அந்த

உத்தியோகத்தர்களினால் முன் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் கோவைகளும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

மாவட்ட செயலகத்தினால் 9 பிரதேச செயலகங்களில் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 141,848,944 கூட்டுத் தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட 244 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்

மாவட்ட செலயகத்தினால் 03 பிரதேச செயலகங்களில் ரூபா 52,104,251 கூட்டுத்தொகையான 30 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

மாவட்ட செலயகத்தினால் 05 பிரதேச செயலகங்களில் ரூபா 167,713,656 கூட்டுத்தொகையான 130 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டது.

### 3.6 வங்கிக் கணக்கு செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்

கண்டி மாவட்ட செயலகத்தினால் 2014 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 384,291 கூட்டுத்தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் பாதுகாப்பு சேவைகளுக்காக தனியார் பாதுகாப்பு சேவை வழங்குகின்ற நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் படி பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் உள்ளடலங்கலாக 08 உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கும் அதற்காக மாதமொன்றிற்கு ரூபா 149,600 கட்டணத்தைச் செலுத்துவதற்கும் இணங்கப்பட்டிருந்தது. பாத்ததும்பர பிரதேச செயலகத்திற்கும் அந்த பாதுகாப்பு சேவை வழங்குகின்ற நிறுவனத்திற்கும் இடையே வேறொரு உடன்படிக்கையின் கீழ் பாத்ததும்பர பிரதேச செயலகத்திற்கு பாதுகாப்பு சேவை வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்திற்கு பாதுகாப்பு சேவை வழங்குகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கிடையே ஒரு உத்தியோகத்தர் பாத்ததும்பர பிரதேச செயலகத்தின் பாதுகாப்பு சேவை நடவடிக்கைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பிரதேச செயலகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) தொழுவ பிரதேச செயலகத்தினால் 6 சந்தர்ப்பங்களின் போது ஆகக் குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படாத கொள்வனவுக் குழுவின் மூலம் ரூபா 684,795 தொகையான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(ஆ) உடபலாத்த பிரதேச செயலகத்தினால் ரூபா 115,424 தொகையான வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பதிவு செய்யாத வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) முன்னைய கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக உடபலாத்த பிரதேச செயலகத்தினால் ரூபா 234,586 தொகையான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) கண்டி மாவட்டத்தின் மினிப்பே, உடதும்பர, மெததும்பர போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் 48 கிலோமீற்றரை மேவுகை செய்யும் வகையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட மின்சார வேலிக்காக வரையறுக்கப்பட்ட தேசிய கேள்விகள் கோரப்பட்டிருந்தது. லொட் இலக்கம் 1 இற்காக இரண்டு கேள்விதாரர்களினால் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒரு கேள்விதாரரினால் நிபந்தனை மீறப்பட்டிருந்ததாக கொள்வனவுக் குழு தீர்மானித்து அந்தக் கேள்வி மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய மற்றைய கேள்விதாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த கொள்வனவின் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. கொள்வனவிற்காக போட்டியாளர்கள் இல்லாமையினால் மதிப்பீட்டிற்கும் கேள்விக்குமிடையே முரண்கள் 27 சதவீதமான காரணத்தால் அலுவலகத்தின் மதிப்பீட்டை ரூபா 99,547 இனால் விஞ்சி மாவட்ட செயலகம் செலவிட்டிருந்தது.

(உ) கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தின் கெப் வண்டிக்கு முன் கண்ணாடி கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் அந்தக் கேள்வி நிராகரிக்கப்பட்டு மோட்டார் வாகன பரீட்சகரின் சிபாரிசின் அடிப்படையில் மற்றைய நிறுவனத்திலிருந்து பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் கோரப்பட்ட கேள்விகளில் குறிப்பிடப்பட்ட பொருத்துதல் கட்டணத்தை ரூபா 28,277 இனால் விஞ்சி முன் கண்ணாடி பொருத்தப்பட்டிருந்தது.

## 3.9 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

பாலத்தின் அருகிலிருந்து ஆரம்பிக்கும் அக்குரணை பிரதேச செயலகத்தின் துணுவில மஹகெலே வீதியின் அபிவிருத்திக்கான பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பெறுமதி தொடர்பில் ஒப்பந்தக்காரரினால் ரூபா 470,110 தொகையான செலவின அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அதற்காக ரூபா 494,426 கொடுப்பனவு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. மேலும் உடன்படிக்கைக்காலம் 2014 யூலை 23 ஆந் திகதியில் முடிவடைந்த போதிலும், 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையான காலத்திற்குரிய செலவின அறிக்கைக்காக நிர்மாணம் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 381,710 பெறுமதியான விலைப்பட்டியல் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3.10 நட்டம் மற்றும் இழப்பு

2014 மே 30 ஆந் திகதிக்கும் 2014 யூன் 02 ஆந் திகதிக்கும் இடையிலான நாளொன்றில் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தின் கெப் வண்டி விபத்திற்குள்ளாகியமையால் கெப் வண்டியின் முன்பக்க கண்ணாடி உடைந்திருந்ததுடன் அது ரூபா 156,959 தொகை செலவில் திருத்தப்பட்டிருந்தது. இதற்காக காப்புறுதிக் கம்பனியிலிருந்து ரூபா 74,000 மீளளிப்புச் செய்யப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டில் ரூபா 82,959 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3.11 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக மாவட்ட செயலகத்தினால் தீர்க்கப்பட்டிராத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2012 | 4.9(ஆ) | அங்கீகாரமின்றி செயலகத்தின் வாகனமொன்று தனிப்பட்ட பயணமொன்றில் ஈடுபட்டிருக்கும் போது விபத்திற்கு உட்பட்டமையால் ஏற்பட்ட நட்ட இழப்பு தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2010 | 4.9(இ) | - மேற்படி - |

## 3.12 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பன்வில பிரதேச செயலகத்தின் முன்பள்ளிப் பாடசாலை மாணவர்களுக்காக பால் கோப்பையொன்றை வழங்கும் செயற்திட்டம், 34 முன்பள்ளிப்பாடசாலைகளில் 29 இல் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் ஆண்டின் இறுதியில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 392,595 தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதன்படி செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நலன்கள் 15 சதவீதமான சிறிய அளவினை மட்டுமே கொண்டிருந்தது.

(ஆ) கண்டி மாவட்ட செயலகத்தின் மூன்று பிரதேச செயலக பிரிவுகளில் மின்சார வேலியினை அமைக்கும் ஒப்பந்தம் தனியார் கம்பனியொன்றுடன் ஒரு மாதகாலத்திற்குள் பூர்த்தி செய்யும் நிபந்தனையின் அடிப்படையில் 2014 செப்தெம்பர் 22 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கைக் காலம் 2015 பெப்ரவரி 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2015 பெப்ரவரி 16 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியான 2015 யூன் 01 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உடன்படிக்கையின் படி நாளொன்றிற்கு ரூபா 1,431 வீதம் 104 நாட்களுக்காக அறவிடவேண்டிய ரூபா 148,824 தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் பிணையின் செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன் நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.13 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 70 | 65 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 51 | 34 | 17 |
| (iii) | இரண்டாம் நிலை | 3,431 | 3,158 | 273 |
| (iv) | ஆரம்ப நிலை | 251 | 203 | 48 |
| | மொத்தம் | 3,803 | 3,460 | 343 |

மீளாய்வாண்டின் இறுதிவரையில் 343 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.